o/c

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C)~~

(கு.வி.நெ.பிரிவு 154 இன் கீழ்)

**(Under Section.173 BNSS)**

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8082810

C

1. District மாவட்டம்: Coimbatore   PS காவல்நிலையம்: V and AC. Coimbatore   Year ஆண்டு: 2024   FIR No. முதல் தகவல் எண்: 07/2024/AC/CB   Date நாள்: 20.9.2024 17.00 hrs.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018   Sections பிரிவுகள்: 7(a), 7(b), 7(a) r/w 12, 7(b) r/w 12

   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள்   Date from நாள் முதல்: 19.9.2024   Date to நாள் வரை: 20.9.2024

   Time Period நேர அளவு :   Time from நேரம் முதல்: 16.30 h.   Time to நேரம் வரை: 04.00 hrs

   (b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 20.09.2024   Time நேரம்: 16.15 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 20.09.2024   Time நேரம்: 16.15 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: written typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: Singanallur Sub-Registrar office Vellalore, Coimbatore approximately 20 kms South-East direction

   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: Tr. P. Sathish kumar   (b) Father's/ ~~Husband's Name~~ : தந்தை / கணவர் பெயர்: Pandi

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 35 years   (d) Nationality : நாட்டினம்: Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில்: Cell Inspector Senior Revenue Inspector   (g) Address : முகவரி: District collector office Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   (1) Tmt. Nancy Nithya Caroline age 44 Temporary Joint Sub registrar Singanallur Sub Registrar office, Coimbatore (2) Tr. M. Boopathi raja Junior Assistant SRO, Singanallur, Coimbatore (3) M. Keerthi shankar S/o Murugavelan (Pvt) No. 17 Palanimuthu pillai street E. deyar palayam, Vellalore, Coimbatore. working in Vardan document writer office

8. Reasons for delay in reporting by the complainant / Informant :

   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Ezhilarasi Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS VAC Coimbatore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 20/09/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.9.2024.

Name: பெயர் Y.Jayalakshmi
Rank: நிலை Inspector No. எண் .........
VAC Coimbatore.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

Contents of FIR in Cr.No.07/2024/AC/CB, u/s 7 (a), 7 (b), 7 (a) & 7 (b) r/w 12 of Prevention of Corruption act 1988 as amended by the prevention of Corruption (Amendment) Act 2018

இன்று 20.09.2024 மாலை சுமார் 16.15 மணியளவில் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் எம்.விஜயலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.P.சதீஸ்குமார், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2024/AC/CB u/s 7 (a), 7 (b), 7 (a) & 7 (b) r/w 12 of PC act 1988 as amended by the prevention of Corruption act (Amendment) Act 2018 ஆக வழக்கு 17.00 மணிக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் P.சதீஸ்குமார், ஆய்வுக்குழு ஆய்வாளர்/ முதுநிலை வருவாய் ஆய்வாளர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கோயம்புத்தூர். ந.க.எண். 192/2024/இ2 நாள் 20.09.2024 அம்மா,பொருள் திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் - சார்பதிவாளர் அலுவலகம், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மனு மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் தற்காலிக இணை சார் பதிவாளராக பணிபுரிந்து வரும், திருமதி.நான்சி நித்யா கரோலின் என்பவர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும் பத்திர எழுத்தர்களிடமிருந்தும் அவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.பூபதிராஜா என்பவர் மூலமாக லஞ்சமாக பணம் பெற்று அப்பணத்தை தினமும் வீட்டுக்கு செல்லும்போது அவரிடமிருந்து பெற்று செல்வதாக நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் மேற்படி அலுவலகத்தை 19.09.2024-ம் தேதி மாலை சுமார் 16.30 மணியிலிருந்து கண்காணித்தபோது மாலை சுமார் 16.50 மணிக்கு மேற்படி சார்பதிவாளர் அலுவலக வளாகத்தில் இருந்து கந்தன் டாக்குமெண்ட் அலுவகத்தில் பணிபுரியும் திரு.கீர்த்தி சங்கர் என்பவர் கையில் காக்கி நிற கவருடன் TN37 DJ 9385 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற இருசக்கர வாகனத்தின், இருக்கைக்கு கீழ் இருக்கும்

Storage-ல் கவரை வைத்துவிட்டு, மேற்படி வாகனத்தில் புறப்பட்டு சென்றார். திடீர் கண்காணிப்பு குழுவில் ஒரு பகுதியினரை சார்பதிவாளர் அலுவலகத்தை தீவிரமாக கண்காணிக்க அலுவலக வளாகத்திற்குள் அனுப்பிவைத்துவிட்டு, இரு சக்கரவாகனத்தில் சென்றவரை கண்காணித்துவிட்டு பின்பு மாலை சுமார் 17.25 மணிக்கு ஊ.த.க காவல் ஆய்வாளர் திருமதி.எம்.விஜயலட்சுமி மற்றும் காவல் குழுவினருடன் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரங்கள் தெரிய வந்தது. மேற்படி அலுவலகத்தில் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.நான்சி நித்யா கரோலின் அவர்களிடம் அறிமுகம் செய்துவிட்டு. அலுவலகத்தில் இருந்த திரு.பூபதிராஜாவை விசாரித்து அவரிடம் பணம் சம்பந்தமாக கேட்டபோது முன்னுக்குபின் முரனாக பதில் அளித்தார். அவரை துருவி விசாரித்தபோது, அவர் 19.09.2024-ம் தேதி வசூல் செய்த பணத்தை கவரில் போட்டு சந்தன் டாக்குமெண்ட் அலுவலகத்தில் பணிபுரியும் திரு.கீர்த்தி சங்கர் என்பவரிடம் கொடுத்ததாகவும், தான் போன் செய்யும்போது வந்து பணத்தை கொடுக்குமாறு கூறி அனுப்பிவைத்ததாக கூறினார். திரு.பூபதிராஜா என்பவரை திரு.கீர்த்திசங்கர் சார்பதிவாளர் அலுவலகம் வர அழைக்கும்படி கூறி, அவர் அழைத்ததன்பேரில் திரு.கீர்த்திசங்கர் மாலை சுமார் 17.40 மணிக்கு இருசக்கர வாகனத்தில் சார் பதிவாளர் அலுவலகம் வந்தவர் பதிவுத்துறை என்ற பெயரில் இருந்த பெரிய காக்கிநிற கவரை ஆஜர் செய்தார். அதில் 9 காகிநிற கவர்கள் இருந்தது. அதிலிருந்த முதல் கவரில் Registration Department என அச்சிடப்பட்டு கவரின் மேல் கருப்பு நிற பேனாவில் Ty 19.09 என்று எழுதப்பட்டும், அதில் ஒரு துண்டு சீட்டில் ஆவண எண்களும் அதற்கு நேர் பணம் வழங்கிய தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த கவரில் மொத்தம் ரூ.12,500/- இருந்தது. அடுத்த சிறிய காக்கி நிற கவரில் Ty என்று எழுதி ஆவண எண்களும் அருகில் 20k வழங்கியதாக எழுதப்பட்டுள்ளது. மேற்படி கவரில் மொத்தம் ரூ.20,000/- இருந்தது. அடுத்த காக்கி நிற கவரில் சிவக்குமார் என்று எழுதி அதில் ரூ.25,000/- இருந்தது. அடுத்த சிறிய காக்கி நிற கவரில் K.முத்துராஜ் என்றும், Madam என்றும் எழுதப்பட்டிருந்தது. அதில் இருந்த ஒரு துண்டு சீட்டில் 16/9 என்று தேதியிட்டு ஆவண எண்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் பணம் ரூ.35,000/- இருந்தது. அடுத்த சிறிய கவரை பார்க்க அதில் Ty என்றும் அதன் கீழ் 19.09 என்று தேதி எழுதப்பட்டு அதில் ரூ.49,000/- இருந்தது. அதன்பின்பு OA என்று எழுதப்பட்ட 4 சிறிய காக்கி நிற கவர் இருந்தது, ஒரு கவரில் ரூ.2,200/-ம், அடுத்த கவரில்

ரூ.2000/-ம், மற்றொன்றில் ரூ.2,000/-ம், மேலும் ஒரு கவரில் ரூ.2,350/-ம் இருந்தது. மேற்படி காக்கி கவர்களுடன் பணம் மொத்தம் ரூ.1,50,050/- மற்றும் இரண்டு துண்டு சீட்டுகள் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைபற்றப்பட்ட பணம், துண்டுசீட்டுகள் மற்றும் கவரில் எழுதி வைத்திருந்த குறிப்புகள் பற்றி இளநிலை உதவியாளர் திரு.பூபதிராஜா என்பவரை விசாரித்தபோது, தான் தற்காலிக சார்பதிவாளர் திருமதி.K.நான்சி நித்யா கரோலின் அவர்கள் சொன்னதின் பேரில், அவர் பத்திரபதிவு மேற்கொண்டதற்கு ஆவண எழுத்தர்களிடமிருந்து தற்காலிக சார்பதிவாளர் திருமதி.K.நான்சி நித்யா கரோலின் அவர்களுக்கு லஞ்சமாகத் தரக்கூடிய பணத்தை வாங்கி வைத்து, ஆவண எண் வாரியாக தன்னுடைய நோட் புத்தகத்தில் பணம் கொடுத்தவர்களின் விபரத்தை குறிப்பு எழுதிவைத்துக்கொள்வதாகவும், திருமதி.K.நான்சி நித்யா கரோலின் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கவரில் போட்டு Ty என்றும். அதன் விரிவாக்கம் Temporary என்றும், தனக்கு சேரவேண்டிய பணத்தை OA என்று எழுதப்பட்ட கவரிலும், பத்திர எழுத்தர்கள் கொடுக்கும் துண்டு சீட்டுடன் இணைத்து கவரில் போட்டு அதனை கந்தன் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் பணிபுரியும் திரு.கீர்த்திசங்கர், ஜெயஸ்ரீ ரைட்டர் அலுவலகத்தில் திரு.கோபால், அறம் டாக்குமெண்டேசன் அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி.நந்தினி மற்றும் சித்ரா ஆறுமுகம் ஆபீசை சேர்ந்த திரு.சதீஸ் ஆகியோர்களிடம் ஒவ்வொரு நாளும் கொடுத்து வைப்பதாகவும், அந்த தகவலை திருமதி.K.நான்சி நித்யா கரோலின் அவர்களுக்கு Whatsapp-ல் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் மாலை அலுவலகப் பணி முடித்து திருமதி.K.நான்சி நித்யா கரோலின் அவர்கள் வீட்டிற்கு செல்லும்போது மேற்படி நபர்களிடம் கொடுத்து வைத்த பணத்தை வாங்கி, தனக்கு சேர வேண்டிய பணத்தை எடுத்துக்கொண்டு, சார்பதிவாளருக்குண்டான பணத்தை வெளியில் வைத்து திருமதி.K.நான்சி நித்யா கரோலின் அவர்களிடம் கொடுத்துவிடுவது வழக்கம் என்றும், 19.09.2024-ம் தேதி ஆவண எழுத்தர்கள் மூலம் வரப்பெற்ற பத்திரங்களை பதிவு செய்ததற்காக லஞ்ச பணத்தை வாங்கி, சார்பதிவாளருக்கு சேர வேண்டிய பணம் ரூ.1,41,500/- தனிதனி 5 கவரில் Ty என எழுதியும், தனக்கு சேரவேண்டிய பணம் ரூ.8,550/- OA என 4 கவரில் எழுதியும், ஆவண எழுத்தர்கள் கொடுத்த துண்டு சீட்டுடன் இணைத்து கீர்த்திசங்கரை போனில் அழைத்து, அலுவலகத்தில் வைத்து அவரிடம் கவரை கொடுத்து அனுப்பி வைத்ததாகவும் தெரிவித்தார். திரு.பூபதிராஜா என்பவரது இருக்கையை சோதனை செய்து அவர் ஆவண எண்களின் விபரம், அதன் தன்மை மற்றும் பத்திர

எழுத்தர்களின் விபரம் எழுதி வைத்திருந்த Jayalakshmi Long size note விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் திருமதி.நான்சி நித்யா கரோலின் அவர்களின் இருகையை சோதனை செய்ததில், அவரது மேசையில் ட்ராயரில் துண்டுசீட்டு காணப்பட்டது. அதில் ஆவண எண் மற்றும் பணம் சம்பந்தமாக எழுதிய விபரங்களும் அதன் அருகில் Cover என்று எழுதப்பட்டு, அதற்கு கீழ் சோபனா. ரேஸ்மா, அமர்சிங் மற்றும் பரிமளா என்று எழுதப்பட்டிருந்தது, மேற்படி குறிப்புகள் பூபதிராஜா எழுதி கொடுத்த குறிப்புகள் என்று தெரிவித்தார். மேற்படி துண்டுசீட்டு கைப்பற்றப்பட்டது. மேலும் கைபற்றப்பட்ட பணம் சம்பந்தமாக திருமதி.நான்சி நித்யா கரோலினை விசாரிக்க, பத்திரப்பதிவு மேற்கொண்டதற்கு ஆவண எழுத்தர்களிடமிருந்து திரு.பூபதிராஜா மூலம் பணம் பெற்றுவருவதாக தெரிவித்தார். திருமதி.நான்சி நித்யா கரோலின் அவர்கள் பயன்படுத்தும் செல்போனை ஆராய்ந்து பார்த்ததில் அதில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.பூபதிராஜா என்பவரது நம்பரில் இருந்து திருமதி.நான்சி நித்யா கரோலின் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த whatsapp குறுஞ்செய்திகளில் பொதுமக்களிடம் இருந்தும் டாக்குமண்ட் ரைட்டர்களிடம் இருந்தும் அவருக்காக வாங்கிய லஞ்சப்பணத்தின் விபரங்களையும் அதனை தான் எந்தெந்த டாக்குமண்ட் ரைட்டர்கள் மற்றும் டாக்குமண்ட் ரைட்டர்களின் அலுவலக உதவியாளரிடம் கொடுத்து வைத்துள்ளார் என்ற விபரங்களையும் குறிப்பெடுத்து பதிவிட்டிருந்தார். அதேபோல் இளநிலை உதவியாளர் திரு.பூபதிராஜா அவர்கள் பயன்படுத்தும் செல்போனை ஆராய்ந்து பார்த்ததில் இருவருக்கும் இடையே நடைபெற்றிருந்த whatsapp குறுஞ்செய்திகள் அவர்களின் செல்போன்களில் ஒத்து இருந்தது. மேற்படி குறுஞ்செய்திகளின் பரிமாற்றங்களை Screen Shot எடுத்து பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுக்கப்பட்டு, கையொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் சான்றொப்பமிட்ட நிலையான முன்பண பதிவேடு, DEO பணியாளர் ரொக்க கையிருப்பு பதிவேடு, பணியாளர்கள் ரொக்க கையிருப்பு பதிவேடு , வருகைபதிவேடு. சான்றொப்பமிட்ட 16.09.2024, 18.09.2024 மற்றும் 19.09.2024 ஆகிய தேதிகளுக்கான Account A பட்டியல்கள், சான்றொப்பமிட்ட ECA and CCA Account D விபரங்கள் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கை விபரம் குறித்து ஓர் நடவடிக்கையை 19.09.2024-ம் தேதி 20.00 மணி முதல் 20.09.2024-ம் தேதி 04.00 மணி வரை தயார் செய்து அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் தணிக்கையின் போது கைபற்றபட்ட பணம்

ரூ.1,50,050/- மற்றும் ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் சம்பந்தமாக புலன்விசாரணை செய்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆய்வுக் குழு ஆய்வாளர்/ முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கோயமுத்தூர் இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,50,050/-, 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் (1. திருமதி.நான்சி நித்யா கரோலின், 2.திரு.பூபதிராஜா மற்றும் 3.திரு.கீர்த்தி சங்கர்) 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். Madam, Received the complaint on 20.09.2024 at about 16.15 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.07/2024/AC/CB u/s 7 (a), 7 (b), 7 (a) & 7 (b) r/w 12 of prevention of Corruption act 1988 as amended by the prevention of Corruption (Amendment) Act 2018 (Sdxxxxxx) M.Vijayalakshmi, Inspecor of Police, V&AC, Coimbatore. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை புகார், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,50,050/- ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயமுத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

(எம்.விஜயலட்சுமி)
20.9.2024
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.